# NEOTS - தமிழோடு விளையாடு 2018

## பிரிவு - கொடி (Juniors)

### போட்டி - குறள்த் தேனீ போட்டி - (கால அளவு - 120 நொடிகள்)

| S.No | அதிகாரம் | குறள் | குறள் எண் | பால் |
|---|---|---|---|---|
| 1 | அறன்வலியுறுத்தல். | அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்<br>புறத்த புகழும் இல. | 39 | அறத்துப்பால் |
| 2 | அன்புடைமை | அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு<br>என்புதோல் போர்த்த உடம்பு | 80 | அறத்துப்பால் |
| 3 | இனியவைகூறல் | பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு<br>அணியல்ல மற்றுப் பிற | 95 | அறத்துப்பால். |
| 4 | செய்ந்நன்றி அறிதல் | காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்<br>ஞாலத்தின் மாணப் பெரிது. | 102 | அறத்துப்பால். |
| 5 | செய்ந்நன்றி அறிதல் | பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்<br>நன்மை கடலின் பெரிது | 103 | அறத்துப்பால். |
| 6 | அடக்கமுடைமை. | நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்<br>மலையினும் மாணப் பெரிது | 124 | அறத்துப்பால் |
| 7 | அடக்கமுடைமை. | தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே<br>நாவினாற் சுட்ட வடு | 129 | அறத்துப்பால் |
| 8 | பொறையுடைமை | அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை<br>இகழ்வார்ப் பொறுத்தல் தலை | 151 | அறத்துப்பால் |
| 9 | ஒப்புரவறிதல் | ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்<br>பேரறி வாளன் திரு | 215 | அறத்துப்பால் |
| 10 | வாய்மை | வாய்மை எனப்படுவது யாதெனின்<br>யாதொன்றும்<br>தீமை இலாத சொலல் | 291 | அறத்துப்பால் |
| 11 | வெகுளாமை | தன்னைத்தான் காக்கின் சினங்காக்க<br>காவாக்கால்<br>தன்னையே கொல்லுஞ் சினம் | 305 | அறத்துப்பால் |
| 12 | இன்னாசெய்யாமை | இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண<br>நன்னயஞ் செய்து விடல் | 314 | அறத்துப்பால் |
| 13 | இன்னாசெய்யாமை | பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்<br>தமக்குஇன்னா<br>பிற்பகல் தாமே வரும் | 319 | அறத்துப்பால் |
| 14 | சிற்றினஞ்சேராமை | மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்கு<br>இனத்துள தாகும் அறிவு | 454 | பொருட்பால் |
| 15 | நட்பு | முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து<br>அகநக நட்பது நட்பு | 786 | பொருட்பால் |